# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள் – 09.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.CP.5520/F/2024**

திரு. துரை முத்துக்குமரசாமி .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
உதவித் திட்ட அலுவலர் (உட்-1),
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
மாவட்ட ஆட்சியரகம், அரியலூர் மாவட்டம் - 621 704. .. பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 09.09.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 11.10.2024 |
| மனுதாரரின் புகார் (CP) மனு நாள் | 12.11.2024 |

****

**ஆணை**

இவ்வழக்கு இன்று (09.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. துரை முத்துக்குமரசாமி என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு E. செல்லதுரை, உதவி திட்ட அலுவலர் (உட்-1), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்ட ஆட்சியரகம், அரியலூர் மாவட்டம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், அரியலூர் மாவட்டம், திட்ட இயக்குநரக அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியம், மேலணிக்குழி ஊராட்சியில் உள்ள வடக்கு வெளி வாரியில் தடுப்பணை அமைப்பது சம்பந்தமான முழு விவரங்கள் மற்றும் தடுப்பணை அமைப்பது சம்பந்தமான கோப்பினை களஆய்வு செய்ய அனுமதி உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 5 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை எனபதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 18(1)-ன் கீழான புகார் மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில் மனுதாரரின் புகார் மனு இன்று (09.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ந.க.எண்.அ10/3991/2024 நாள் 07.04.2025 தேதியிட்டு தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான ஆவண நகலினை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனது மனுவில் கோரியுள்ள தகவல்கள் குறித்து முழுமையான தகவல்கள் தனக்கு வழங்கப்படவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள மேலணிக்குழி ஊராட்சியில் உள்ள வடக்கு வெளி வாரியில் தடுப்பணை அமைப்பது சம்பந்தமான கோப்புகளை பார்வையிட தனக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

***6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், பொதுத் தகவல் அலுவலர், இவ்வாணைக் கிடைக்கப்பெற்ற 15 நாட்களுக்குள், மனுதாரருக்கு அறிவிப்பு கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில் இதர அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படாவண்ணம், மனுதாரரை அலுவலகத்திற்கு வரவழைத்து, அவரது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள மேலணிக்குழி ஊராட்சியில் உள்ள வடக்கு வெளி வாரியில் தடுப்பணை அமைப்பது சம்பந்தமான கோப்புகளை தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 2(j)-ன்படி ஆஜர்படுத்தி, மனுதாரர் ஆய்வு செய்த பின்னர் அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டு கோரும்பட்சத்தில் அதனை ஒளிநகலெடுத்து, உரிய சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணமின்றி வழங்கி, மனுதாரர் தகவல்களை பெற்றுக் கொண்டதற்கான நகல் மற்றும் ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாக தயாரித்து இவ்வாணையத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, மனுதாரரின் புகார் மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.***

*7. மேற்படி, இவ்வாணையத்தின் உத்திரவிற்கிணங்க பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு தகவல்களை வழங்கத் தவறும் பட்சத்தில், தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 20(1) மற்றும் பிரிவு 19(8)(b) ஆகியவற்றின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.*

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.CP.5520/F/2024</u>**
பெறுநர்
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
உதவித் திட்ட அலுவலர் (உட்-1),
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
மாவட்ட ஆட்சியரகம், அரியலூர் மாவட்டம் - 621 704.

**<u>வழக்கு எண்.CP.5520/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு. துரை முத்துக்குமரசாமி,
எண்.58 A, தெற்கு வீதி,
மேலணிக்குழி - 612 906,
அரியலூர் மாவட்டம்.

Copy to: File
SNPS / 11.04.2025